දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 , 0112675011 ) 0112698507 , 0112694033 ) 0112675449 , 0112675280
ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 ) 0112693869 ) 0112692913
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / E-mail ) postmaster@health.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

මගේ අංකය / எனது இல / My No. ) CF/EXU/03/2022
ඔබේ අංකය / உமது இல / Your No. )
දිනය / திகதி / Date ) 2022/07/ 02

பொது சுற்றுநிருப கடித இலக்கம் :- 02 - 57 /2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.

உரிய நிறுவனத் தலைவர்கள்,

**சுகாதார அமைச்சில் MT - 06 சம்பள அளவுக்குரிய மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழிநுட்பவியலாளர் சேவைக்குரிய தரம் III இலுள்ள பேச்சுச் சிகிச்சையாளர்களுக்கான வினைத்திறமைகான் தடைப்பரீட்சை – 2022 (முதலாவது தடவை)**

பேச்சுச் சிகிச்சையாளர் பதவியின் தரம் III ற்கு நியமனம் ஆட்சேர்ப்பு 3 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தாள் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும். திகதி, இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்படும்.

02. தகைமைகள்

பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு நியமனம் பெற்று நான்காவது சம்பளப் படிநிலையை இதுவரை அடையாத உத்தியோகத்தர்களும், இதுவரையில் இப்பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு :

- பழைய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக முறைமைகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் ஆகிய இரண்டு பாடங்களிலும் சித்தியடைந்த அலுவலர்கள் புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து பழைய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சைக்காக குறிப்பிடப்பட்டுள்ள திணைக்கள ஒழுங்கு விதிகளிலிருந்து விலக்களிக்கப்டுவார்கள்.
- பழைய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக முறைமைகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் ஆகியவற்றில் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்தியடைந்த அலுவலர்கள் ( புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் வினைத்திறன் தடைப்பரீட்சையின் பொருட்டு குறிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட பாடங்களில் சித்தியடைந்த பின்னர்) முதலாவது வினைத்திறன் பரீட்சையில் சித்தியடைந்ததாக கருதப்பட்டு அப்பரீட்சையிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவார்கள்


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

03. விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருப கடிதத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம் விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு **2022/08/15** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையென பிரிவுத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது விண்ணப்பப் படிவத்துடன் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய கடித உறைகள் **ஒன்று** அனுப்பப்படல் வேண்டும். (இக் கடிதவுறையில் விரும்பியவாறு அலுவலக முகவரியை அல்லது தனிப்பட்ட முகவரியினை எழுதியனுப்பலாம்) தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்கள், தவறான அல்லது முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

கவனிக்கவும் : மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் **A4** தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 வரையும் இரண்டாம் பக்கத்தில் 05 - **09** வரையும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. பரீட்சைக் கட்டணம்

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் பாடம் ஒன்றுக்கு ரூபா 25.00 வீதம் பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன் மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

**4.2** இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றுதலோ, மீள வழங்கப்படுதலோ மேற்கொள்ளப்பட மாட்டாது.

05. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

**5.1** ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

**5.2** பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது அடையத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு அல்லது அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

06. பரீட்சை திட்டம்

இப்பரீட்சையானது தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறைவிதிகள் மற்றும் நிதிப்பிரமானம் எனும் இரண்டு எழுத்து மூலமான வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.. ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாகவும் 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாகவும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒரே தடவையில் அல்லது பல்வேறு தடவைகளில், பகுதி பகுதியாகவேனும் தோற்றி இப் பரீட்சையினைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம். முதல் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் அனைத்து பாடங்களுக்கும் விண்ணப்பித்தல் வேண்டும்.

07. பாடத்திட்டம்

**7.1** தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை விதிகள் (02 மணித்தியாளம்)

இந்த வினாத்தாள் கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

இந்த வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் மற்றும் பொது சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தயார்க்கப்படும்.

| | | |
|---|---|---|
| IV ம் அத்தியாயம் | - | மாதாந்தம் ஊதியம் வழங்குதல், தற்காலிக நிலை, நிரந்தர நிலை மற்றும் ஓய்வூதியம் |
| XII ம் அத்தியாயம் | - | லீவு / விடுமுறை |
| XIII ம் அத்தியாயம் | - | புகையிரத ஆணைச்சீட்டு |
| XIV ம் அத்தியாயம் | - | உள்நாட்டிற்குள் கடமை தொடர்பான பிரயாணம் |
| XIX ம் அத்தியாயம் | - | அரசாங்க தங்குமிட விடுதிகள் (குடியிருப்புகள்) |
| XLVII ம் அத்தியாயம் | - | பொது நடத்தை மற்றும் ஒழுக்கம் |
| XLVIII ம் அத்தியாயம் | - | ஒழுக்காற்று நடைமுறை விதிகள் |

**7.2** நிதிப்பிரமாணம் (02 மணித்தியாளம்)

**இந்த வினாத்தாள் கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**

| | | |
|---|---|---|
| I ம் அத்தியாயம் | - | செலவு மற்றும் வரவு மதிப்பீடு, திரண்ட நிதி, வருடாந்த மதிப்பீடுகள், வருடாந்த மதிப்பீடுகளுக்கான மாறுபாடுகள் (நி.பி. 1 – நி.பி. 68 ) |
| III ம் அத்தியாயம் | - | நிதி நிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறல், பிரதம கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு அலுவலர்கள், கொடுப்பணவுகளின் அங்கீகாரம் வழங்குதல், அதிகாரமளித்தல் உறுதிப்படுத்துதல், பிரதிநிதித்துவப்படுத்துதல். (நி.பி. 124 – நி.பி. 147 ) |

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்று நிருப கடிதத்தில் உள்ளடக்கிய விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். (இந்த தகவல்களை www.health.gov.lk என்னும் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்)

**Web Path: - www.health.gov.lk → Staff Access → Admin → Circulars**

**கவனிக்கவும் : - சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான இந்த சுற்று நிருப கடிதங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழயிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

ஷாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக,
சுகாதாரஅமைச்சு

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

**EXU**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

<u>சுகாதார அமைச்சில் **MT** - 06 சம்பள அளவுக்குரிய மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழிநுட்பவியலாளர் சேவைக்குரிய தரம் **III** இலுள்ள பேச்சுச் சிகிச்சையாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2022 (முதலாவது தடவை)</u>

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) : ............................................

..................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) ..............................................

..................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) முதல் நியமனத் திகதி : ..................................................................

(ii) தற்போது பெறும் வருடாந் சம்பளம்: ..........................................................

(iii) தொலைபேசி இல: | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இல : | | | | | | | | | | | | |

(v) மின்னஞ்சல் முகவரி : ..................................................................

02. நீங்கள் இம்முறை தோற்ற விரும்பும் விடயங்களின் முன்னால் உள்ள பெட்டியில் ✓அடையாளம் இடுக. தோற்ற விரும்பாத பாடங்களுக்கு முன்னால் உள்ள பெட்டியில் ×அடையாளம் இடுக.

தாபன விதிக் கோவை மற்றும் நடைமுறை விதிகள் ☐

நிதிப்பிரமாணம் ☐

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் : ..........................................................

(ஆ) அந்நிறுவம் சொந்தமாவது: மத்திய அரசிற்கு ☐ மாகாண சபைக்கு ☐

(இ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..................................................

(ஈ) அது சொந்தமாகும் மாவட்டம்:.................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைப்பதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய சுய முகவரியிடப்பட்ட 9”x4” அளவுடைய ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்டுள்ள கடித உறை விண்ணப்பத்துடன் **<u>ஒன்று</u>** இணைக்கப்பட்டு உள்ளதா?

..................................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) : ..................................................................

..................................................................................................

(எ) (ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ......................................

..................................................................................................

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................................



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ....................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ............................

| முத்திரைக் கூண்டு |
|---|
| |

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .............................

.............................................
பெயர் மற்றும் கையொப்பம்

08. திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திரு/திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும் இவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக / முதன்முறையாக அல்லாதபடியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்டுள்ளதெனவும் / முத்திரை ஒட்டப்பட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் அவருடைய சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவை எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை கொண்டுள்ளதாகவும் இன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்வும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................

....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்

திரு/திருமதி/செல்வி/செல்வன் ........................................... என்பவர் எனது நிறுவனத்தில் பேச்சு சிகிச்சையாளராக கடமையாற்றும் உத்தியோகத்தர் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சுயவிபரக் கோவையிலுள்ள விபரங்களின் படி சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான தகைமைகளினை கொண்டுள்ளதாகவும் இத்தாள் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ...............................

.....................................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

*தேவையற்ற பகுதிகளை கீறிட்டு வெட்டிவிடவும்*



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.